**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை இன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ்) 9 – சரக்கிருப்பு;** ஆண்டின் இறுதியில் பௌதீக இருப்புக் கணக்கெடுப்பை அவதானிக்க முடியாதிருந்ததுடன் சுயாதீன உறுதிப்படுத்தல்கள் இல்லாத காரணத்தால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 149,490,346 பெறுமதியான சரக்கிருப்பின் கிடைக்கக் கூடிய தன்மையை மாற்று முறைகளிலேனும் மெய்மையாய்வு செய்து திருப்தி அடையவில்லை. இந்தத் தொகையில் உதிரிபாகங்கள் மற்றும் கருவிகள், விற்கப்படாத வெளியீடுகள் மற்றும் ஏனைய எழுதுகருவிப் பொருட்களின் பெறுமதிகள் உள்ளடங்கியுள்ளது.<br>இதனிடையே, உதிரிபாகங்கள் மற்றும் கருவிகள் போன்ற பயிற்சிப் பொருட்களை பிரதான இருப்புகளிலிருந்து வேறுபடுத்தி | இருப்புக் கணக்கெடுப்பு மற்றும் மெய்மையாய்வுச் சபை ஆகியவற்றை ஒரே நேரத்தில் மேற்கொள்ளவும், இருப்புக்களிலிருந்து பயிற்சிப் பொருட்களை இனங்காணவும், சரக்கிருப்புகளை தனித்தனியாக மறுமதிப்பீடு செய்யவும் தேவையான நடவடிக்கைக எடுக்கப்படும்.<br><br>மேலும், இருப்புக் கணக்கெடுப்பு செயல்முறை முடிந்த பின்னர், சேதமடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத இருப்புப் பொருட்களை அதிகாரசபை அப்புறப்படுத்தும். | ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் அதிகாரசபையானது பௌதீக இருப்பு மெய்மையாய்வை மேற்கொண்டு பொது முயற்சிகளுக்கான குழு (COPE) கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுதோறும் மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு 2012 ஆகஸ்ட் 06 அன்று நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழு (COPE) கூட்டத்தில் அதிகாரசபையின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 வரையிலும் இந்த அறிவுறுத்தல் களுடன் இணங்கியொழுகுவதற்கு அதிகாரசபை தவறியி ருந்தது. மேலும், தேவையற்ற பொருட்களை குழுவொன்றின் மூலம் அடையாளம் கண்டு அப்புறப்படுத்துவதாக இக்கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அதிகாரசபை அதற்கேற்ப செயற்பட்டிருக்கவில்லை. மேற்கூறியவை காரணமாக, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 149 மில்லியன் பெறுமதியான சரக்கிருப்பின் சரியான தன்மை மற்றும் நியாயமான பெறுமதி குறித்து அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்க முடியவில்லை. | | |
| (ஆ) | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சுமார் ரூபா 101,113,140 கிரயமான சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார வாழ்க்கைக் காலத்தை **எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** என்ற கணக்கீட்டு நியமத்திலுள்ள 65 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், மேற்படி முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் மதிப்பீட்டு வழு **எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் 3 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கள்** என்ற நியமத்தின் பிரகாரம் திருத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை இனங்கண்டு வகைப்படுத்துவதற்கும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரைப்படுத்துவதற்கும் தற்போது அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடுகள் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு மீள விலைமதிக்கப்படும்.<br><br>இந்த செயல்முறை முடிவடைந்த பின்னர் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 101 மில்லியன் சொத்துக்களின் பயனுள்ள வாழ்க்கைக் காலத்தை அதிகாரசபை மீள்மதிப்பீடு செய்யும். | முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார வாழ்க்கை காலத்தை மறுமதிப்பீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுப்பதுடன், மீள்மதிப்பீட்டு செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மற்றும் கணக்கீட்டுப் பரிகாரங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, ரூபா 154,045,468 தொகை பணிக்கொடைக் கொடுப்பனவுக்காக வைக்கப்பட் டுள்ளது எனக் குறிப்பிட்டு நிலையான வைப்புக்கள், அழைப்பு வைப்புக்கள் மற்றும் திறைசேரி பிணைப்பத்திரங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த முதலீடுகள் (ரூபா 50 மில்லியன் அழைப்பு வைப்புத்தொகை உட்பட) 4 ஆண்டுகளுக்கும் மேலாக மாற்றமின்றி வைக்கப்பட்டிருந்ததுடன், இந்த பணிக்கொடை முதலீடுகளிலிருந்து | முன்கூட்டிய மீளப்பெறுதல் மீது அபராதம் விதிக்கப்படுவதால் அதிகாரசபை எதிர்பார்த்த வட்டி வருமான த்தை இழக்க நேரிடும் என்பதால் பணிக்கொடைக் கான கொடுப்பனவுகள் அதிகார சபையின் சொந்த நிதியில் இருந்து விடுவிக்க ப்பட்டது.<br><br>மேலும், முதலீட்டுத் திட்டங்களை மறுபரிசீலனை | அதிகாரசபையின் உண்மையான நிகழத்தக்க பொறுப்புகளை பகுப்பாய்வு செய்த பின்னர் முதலீடுகள் மீண்டும் பட்டியலிடப்படுதல் வேண்டுமென்பதுடன் 04 வருடங்களுக்கு முன்னர் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 50 மில்லியன் அழை |

| | | |
|---|---|---|
| பெறப்பட்ட ரூபா 7.5 மில்லியன் வட்டி வருமானம் **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 - “ஊழியர் நலன்கள்”,** இன் படி பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஏற்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் வருமானமாக கருதப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான வருமானம் அந்தத் தொகையால் மிகைப்படுத்தப்பட்டிருந்த அதேவேளை பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கு குறைத்து கூறப்பட்டிருந்தது. | செய்வதற்காக ஏற்கனவே உள்ள வைப்புத்தொகைகள் முகாமைத்துவ சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், வட்டிக் கூறுகளை மூலதனமாக்குவதன் மூலம் இவை மாற்றியமைக்கப்படும். | ப்பு வைப்பு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதிகாரசபை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதன் ரூபா 745,463,465 பெறுமதியுள்ள நிலையான சொத்துக்களை சரியாக குறியீடு செய்திருக்காததுடன், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (PPE) பெறுமதியை சரியாகக் கண்டறிந்து அதற்கேற்ப வருடாந்த சொத்து சரிபார்ப்பை மேற்கொள்வதற்கு முடியுமான விதத்தில் அந்த குறியீடுகள் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கைதவிர்க்கப்பட்ட பொருட்களை அகற்றி, புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களைச் சேர்த்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளுக்கு ஏற்ப அதிகாரசபை தனது நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்திருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | மெய்மையாய்வுச் சபை முடிவடைந்த பின்னர் சொத்தின் கிரயம் மற்றும் அவை காணப்படும் இடம் என்பவற்றை இனங்கண்டு முறையான குறியீட்டு முறையுடன் புதுப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படும். | வருடாந்த மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு முன்னர் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (PPE) பௌதீகரீதியான காணப்படும் தன்மையை சரியாகக் கண்டறிவதற்கு முடியுமான விதத்தில் அதிகாரசபை அதன் PPE இற்களுக்கு குறியீடுகளை இடுதல் வேண்டும். |
| (ஆ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு (யூடீஏ) சொந்தமான காணியில் தொழிற்பட்டு வருகின்ற அதிகாரசபையின் நிர்மாண உபகரண பயிற்சி நிலையம் (CETRAC) இற்கான காணியின் உரித்துறுதியை வழங்குவதற்கு ரூபா 54,890,701 தொகை உள்ளிட்ட 7 சதவீத தாமதக் கட்டணத்தை செலுத்துமாறு 2019 ஆம் ஆண்டில் யூடீஏ அதிகாரசபையை கோரியிருந்தது. இருப்பினும், இந்த அறிக்கைத் திகதி வரை குறித்த தொகையை யூடீஏ இற்கு செலுத்தித் தீர்ப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்ததுடன் இது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் எந்தவொரு ஏற்பாடோ அல்லது வெளிப்படுத்தலோ செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கொடுப்பனவைச் செய்வதற்கு அதிகாரசபையிடம் நிதி இல்லாததால், யூடீஏ க்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் சலுகையை வழங்குமாறு வரிசை அமைச்சின் ஊடாக அதிகாரசபை கோரிக்கை விடுத்துள்ளது.<br><br>அதன்பிறகு, நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் 2022.02.01 அன்று யூடீஏ க்கு இந்தச் சலுகையை வழங்குவது குறித்து பரிசீலிக்கக் கோரி கடிதம் அனுப்பினார். | இந்த சிக்கலை தீர்ப்பதற்கு அதிகாரசபை யூடீஏ உடன் முறையான குத்தகை உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதுடன் இறுதிக் கணக்குகளில் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மற்றும் சீராக்கல்களை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) 13 வருடகால உத்திரவாதத் தொடர் கல்வி (NVQ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை | முறையான நிதி, கண்காணிப்பு மற்றும் அங்கீகாரம் | நிதிக்கூற்றுக்களின் நியாயமான சமர்ப்பி |

| | | | |
|---|---|---|---|
| | நடத்துவதற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 10,000,000 மற்றும் ரூபா 35,844,000 தொகை கல்வி அமைச்சிடமிருந்து அதிகாரசபைக்கு கிடைத்திருந்தது. அதனைத் தொடர்ந்து இந்தத் தொகைகள் தனியானதோர் நிதியக் கணக்கில் செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்கான வருமானமாக அதிகார சபை அங்கீகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 வரையிலும் மேற்படி தொகைகளிலிருந்து ரூபா 13,458,544 மாத்திரமே இந்தப் பயிற்சித் திட்டத்திற்காக செலவாகியுள்ளது. அதன் விளைவாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுத்திவைத்த உழைப்புக்கள் ரூபா 32,299,656 தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்த அதேவேளை செலுத்த வேண்டிய கணக்குகள் அதனையொத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. மேலும், மேற்படி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான செயல் முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. | ஆகியவற்றை மேற்கொள் வதில் குறைபாடுகள் இடம் பெற்றுள்ளதை அதிகார சபையின் நிர்வாகம் தற் போது உணர்ந்துள்ளது. சீராக்கல்கள் நடைபெற்று வருவதுடன், இந்த ஆண்டின் இறுதிக்குள் முறையான கணக்கு ஆவணங்களுக்கான நடைமுறை அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | த்தலை உறுதிப்படுத் துவதற்காக சரிமான மற்றும் உரிய கண க்கீட்டுப் பதிவுகள் கணக்குப் புத்தக ங்களில் செய்யப்ப டுதல் வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் 5 வகையான சொத்துக்க ளுடன் சம்பந்தப்பட்டதாக நிலையான சொத்துப் பதிவேட்டிலும் நிதிக் கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள திரண்ட தேய்மானத்திற்கு இடையே ரூபா 11,470,290 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதா னிக்கப்பட்டது. இருப்பினும், கணக்கிணக் கங்களை மேற்கொள்வதன் மூலம் இந்த வேறுபாடுகளை சீரா க்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திரண்ட தேய்மானத்தின் சரியான தொகை 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளது. விரிவான பட்டோலை ஏற்கனவே தேசிய கணக்காய்வு அலுவ லகத்திற்கு சமர்ப்பிக்கப்பட் டது. நிலையான சொத்துப் பதிவேட்டிற்கும் நிதிக் கூற்றுக்களிற்கும் இடையே தேய்மான வேறுபாடு எதுவும் காணப்படவில்லை. | இந்த வேறுபாடு களை சரிசெய்து ஓர் கணக்கிணக்கக் கூற்றை கணக்காய் விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (உ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 56 வாகனங்கள் அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்டது. இருப்பினும், 46 வாகனங்கள் தொடர்பான கிரயம், தேய்மானம் மற்றும் திரண்ட தேய்மானம் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த வாகனங்களின் பௌதீக இருப்பை உறுதி செய்வதற்காக மீளாய்வாண்டிலும் அல்லது முன்னைய ஆண்டுகளிலும் பௌதீக கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, மீளாய்வாண்டிலேனும் எஞ்சிய 10 வாகனங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | சில வாகனங்கள் இயந்திரங் களின் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளன (உதாரணமாக: பவுசர்). இது ஒரு சிக்கலான மதிப்பீட்டிற்கு உட்பட்டுள்ள துடன் கனரக இயந்திரங்க ளும் வாகனங்கள் என்று அடையாளம் காணப்பட்டுள் ளது. அதிகாரசபையின் நிர்வாகம் முறையான தெளிவுபடுத்த லுடன் வடிவமைப்பில் செய் யப்படும் மாற்றங்களை இப் போது அங்கீகரித்துள்ளது டன் இது எதிர்வரும் மெய்மையாய்வுச் சபையில் முறைப்படுத்தப்பட வேண்டும். | மெய்மையாய்வுச் சபை நடாத்தப்பட்ட பின்னர் அதிகாரசபை பக்குச் சொந்தமான அனைத்து வாகனங் களும் இனங்காண ப்பட்டு அவை மெறுமதியிடப்பட்டு அதற்கேற்ப கணக்கு களில் பதிவு செய்ய ப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தோகை | கிடைக்காத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| i. | குாணி | 77,000 | காணி உரித்துறுதி | குறித்த விவரங்கள் தற்போது கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பான விவரங்களைப் பெறுவதற்காக காணிகளின் உரிமைப் பத்திரங்களை வழங்குவதில் ஈடுபட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்களைக் கலந்தாலோசிக்க நடவடிக்கை எடுப்பேன். | |
| ii. | நூலகப் புத்தகங்கள் | 2,294,871 | ஒவ்வொரு புத்தகத்தினதும் கிரயத்தைக் குறிப்படும் கணக்கெடுப்பு அறிக்கை | நிலையான சொத்து பதிவேட்டில் தொடர்புடைய நூலக புத்தகங்களின் விவரங்கள் இல்லை. அதிகாரசபையின் நிலையான சொத்துக்கள் அனைத்தையும் மறுமதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. மறுமதிப்பீட்டு செயல்முறைக்குப் பிறகு நிலையான சொத்துப் பதிவேட்டை உருவாக்க முடியும். | இந்த மீதிகளின் சரியான மற்றும் நம்பகத் தன்மையை மெய்மையாய்வு செவதற்குத் தேவையான சான்றுகளை முகாமைத்துவம் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| iii. | பெறவேண்டிய இருப்பு விற்பனை வருமானம் | 16,485 | ஆதாரப்படுத்தல் ஆவணங்கள் | விவரங்கள் எதிர்காலத்தில் அனுப்பப்படும் | |
| iv. | வாடகை வருமானம் | 4,547,050 | வாடகை வருமான பதிவேடு, மதிப்பீட்டு அறிக்கை மற்றும் வாடகைதாரர் விபரங்கள் போன்றன. | விரிவான பட்டோலை ஏற்கனவே தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | |
| v. | திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட செலவினம் (பிபிஈ மாதிரி) | 79,956,244 | சம்பந்தப்பட்ட கோவைகள், விபரமான திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட செயல் முன்னேற்றம் | ஒரு கோப்பு தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. | |
| vi. | எரிபொருள், எண்ணெய் மற்றும் வாகன ஓட்டச் செலவினம் | 9,815,791 | 2021 இற்கான எரிபொருள் பரிசோதனை அறிக்கைகள் | கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக ஊழியர்களின் வருகை மட்டுப்பாடு காரணமாக எரிபொருள் சோதனை மேற்கொள்ளப்படவில்லை. | |
| vii | பெறுமதிசேர் வரிக் (பெ.சே.வ.) கொடுப்ப | 13,874,360 | வெளியீட்டு பெ.சே.வ. இன் கணிப்பீட்டிற்காக கருத்திற் | பெ.சே.வ. வருமானம் ஏற்கனவே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கைமுறையாகவும் ஆன்லைனிலும் வழங்கப்பட் | பெ.சே.வ. கொடுப்பனவுகளின் சரியான மற்றும் பூரணத்துவத் தன்மையை |

| | | | |
|---|---|---|---|
| னவுகள் | கொள்ளப்பட்ட வரிவிதிக்கத்தக்க வழங்கல்கள் மற்றும் வருமானத்தின் கணக்கிணைக்கக் கூற்று மற்றும் பெ.சே.வ. அனுப்புதல்கள் | டுள்ளது. 2022 சனவரி 01 முதல் பெ.சே.வ. செலுத்துதல் மற்றும் பெ.சே.வ. திரும்பப்பெறுதல் விவரங்களை சரிசெய்ய சரியான முறை நிறுவப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்துவதற்காக பெ.சே. வ. இன் கணிப்பீட்டிற்காக கருத்திற்கொள்ளப்பட்ட வரிவிதிக்கத்தக்க வழங்கல்கள் மற்றும் வருமானத்தின் கணக்கிணைக்கக் கூற்றை முகாமைத்துவம் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 10,753,391 தொகையான 82 கடன்பட்டோர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டன. இருப்பினும், ரூபா 3,652,559 தொகைக்குரிய 14 கடன்பட்டோர்களிடமிருந்து மாத்திரமே உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருந்தன. மேலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வின் படி, ரூபா 3,787,238 கூட்டுத் தொகையான கடன்பட்டோர் மீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக இருந்ததுடன் அந்தத் தொகை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன், ரூபா 1,488,531 தொகையான கடன்பட்டோர் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் எவ்வித மாற்றமும் இன்றிக் காணப்பட்டன. அதன்படி, கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் கடன்பட்டோர் அகற்றல் கணக்கில் நீண்ட காலமாக காணப்பட்ட நிலுவைத் தொகையை பதிவழிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>பல்வேறு கடன்பட்டோர்களிடமிருந்து நீண்டகாலமாக நிலுவையிலுள்ள தொகையை வசூலிக்க பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2021 இல் தொடர்புடைய கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதிகார சபையின் சட்டப் பிரிவால் கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பபப்பட்டு செயலாக்கப்படுகிறது. | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு அதிகார சபை பயனுள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன், இறுதிக் கணக்குகளில் அறவிடக் கூடிய கடன்பட்டோரின் பெறுமதி மாத்திரம் காண்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய பிடிகாசு ரூபா 3,141,125 ஆனதுடன் அதில் ரூபா 2,274,459 ஆனதோர் தொகை அல்லது 72 சதவீதமானவை 2022 மே 31 வரை தீர்க்கப்படாது 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாகவுள்ளது.<br><br>அவ்வாறே ரூபா 4,660,622 மொத்தத் தொகையான சில்லறைக் கடன்கொடுத்தோர்கள் 2021 திசெம்பர் 31 இல் | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நாம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளை சபைக்குச் சமர்ப்பிப்போம். | சாத்தியமான கடன்கொடுத்தோர் மீதிகளை தாமதமின்றி தீர்வு செய்வதற்கும் ஏனையவற்றை இறுதிக் கணக்குகளில் வருமானமாக கருதுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறே, 02 ஆண்டுகளிற்கும் மேல் நிலுவையாகவுள்ள பிடிகாசு |

| | | |
|---|---|---|
| உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக உள்ளதுடன் அதில் ரூபா 687,517 தொகை இவ்வறிக்கைத் திகதி வரையிலேனும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதேவேளை, இந்த மீதிகள் 2022 ஏப்ரல் 30 வரை எவ்வித மாற்றமும் இன்றிக் காணப்பட்டது. | | தொகையினை வருமான மாக கருதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**1.6.3 முற்பணங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு தரப்பினர்களிற்கு அவ்வப்போது வழங்கப்பட்ட ரூபா 1,347,357 தொகையான பதினாறு முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் அந்த மீதிகளை இனங்கணாது மற்றும் அறவிடப்படாது ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக கணக்குகளிற்கு தொடர்ச்சியாக முன்னெடுத்து வரப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பத ற்காக நாம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளை சபைக்குச் சமர்ப்பிப்போம். | முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கங் கள் முடிவடைந்தவுடன் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத் தின் 11 ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களுடன் இணை த்து 2021 ஆம் ஆண்டிற்கான வரைவு வருடாந்த அறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட் டிருக்கவில்லை. | சபைக்குச் சமர்ப்பிக்கப் பட்ட பின்னர் இது உங்களுக்கு கிடைக்க க்கூடியதாக இருக்கும். | நிதிக்கூற்றுக்களு டன் இணைத்து வரைவு வருடா ந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுத ல் வேண்டும். |
| (ஆ) 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபி விருத்தி சட்டத்தின் பகுதி II, பிரிவு 7(1) | அமெரிக்க டாலருக்கு நிகராக ரூபாவின் மதிப்பு பெருமளவு சரிந்துள்ளமை, எரிபொருள் தட்டுப்பாடு, நிர்மாணப் பொரு ட்களின் பெருமளவு விலை ஏற்றம் மற்றும் நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறை போன்ற நிர்மாணக் கைத் தொழில் எதிர்கொண்டுள்ள தற்போதைய பிரச்சினைகளு க்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்மொழி வதற்காக 03 மாதங்களுக்கு ஒருமுறையேனும் தேசிய ஆலோசனைக் குழு (NAC) கூட்டத்தை நடத்துவது மிகவும் முக்கியமானதாகும்.<br>எவ்வாறாயினும், தேசிய நிர்மாணக் கொள்கையைத் திருத்துவதற்கும், நிர்மாணத் | NAC இன் 15வது கூட்டம் 2022.01.04 அன்று வரிசை அமை ச்சின் செயலாளர் தலைமையில் அந்த அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற் றது.<br>அதன்பின்னர், செயலா ளரின் அறிவுறுத்தலி ன்படி இந்த NAC கூட்டங்களின் அறிக் கையினை தயாரித்து, அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 2022.03.04 ஆந் திகதி முகப்புக் கடிதத்துடன் NAC கூட்டத்தின் அத்த கைய கூட்டக் குறிப்பு | நிர்மாணக் கைத் தொழில் எதிர் கொண்டுள்ள தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பத ற்காக தேசிய ஆலோசனைக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு, இது தொடர்பாக உரிய கொள்கை தீர்மானங்களை எடுப்பதற்கு அரசு க்கு ஆலோசனை வழங்க வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | துறையின் வளர்ச்சி மற்றும் நிலைபேறான தன்மைக்குத் தேவையான நடவடிக்கைகளை முன்மொழிவதற்கும் என மீளாய்வாண்டிலோ அல்லது அதற்கு முந்தைய ஆண்டிலோ NAC கூட்டம் நடத்தப்பட்டிருக்கவில்லை. தற்போதைய அதிகாரசபையின் சுட்டிகளும் நாட்டின் உண்மையான விலை ஏற்ற இறக்கங்களை பிரதிபலிக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதன்பின்னர், அதிகார சபையுடன் ஒருங்கிணைந்து NAC கூட்டங்களை ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டுள்ள வரிசை அமைச்சின் தொழில்நுட்பப் பிரிவின் அதிகாரிகள், வரிசை அமைச்சின் செயலாளரிடம் தேதியைப் பெற்று, அடுத்த NAC கூட்டம் விரைவில் திட்டமிடப்படும் என்று தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி 3 மாதங்களுக்கு ஒருமுறை கூட்டத்தை கூட்டுவதற்கான உதவிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 7(1)(அ), (ஆ) மற்றும் (இ) பிரிவுகள் | 2022 சனவரி 11 மற்றும் 2022 மார்ச் 18 ஆகிய திகதிகளில் மீளாய்வாண்டில் இடம்பெற்ற சபைக் கூட்டக் குறிப்புகளை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் அவை சமர்ப்பிக்கப்படவில்லை. | மீளாய்வாண்டில் (2021) இடம்பெற்ற சபைக் கூட்டங்களின் குறிப்புகளை உரிய திகதியில் அரசாங்க கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாது போனதுடன் தவறு காரணமாக அது அதற்குப் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிலை எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபைக் கூட்டக் குறிப்புகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்ற வேளையில் அவை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 571(2) | 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட அனைத்து வைப்புக்களும் அதிகாரசபையின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது இனங்காணப்படாத மற்றும் செலுத்தவேண்டிய பிடிகாசு, கேள்விப்பண வைப்புக்கள் | கேள்விப்பண வைப்புதாரர்களிற்கு ஞாபகப்படுத்தல் கடிதங்களை அனுப்புமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரைத்துள்ளது. அதன்படி, கேள்விப்பண வைப்புதாரர்களிற்கு | 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட அனைத்து வைப்புக்களும் அதிகார சபையின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போன்ற காலங்கடந்த வைப்புக்களான ரூபா 2,955,273 கூட்டுதொகை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையால் வைப்புக்களில் வைக்கப்பட்டுள்ளது. | ஞாபகப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டதுடன், செலுத்த வேண்டிய பிடிகாசை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | நிதிப்பிரமாணங்கள் 756, 757, 758 மற்றும் 759 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | • ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் இறுதியில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற நடைமுறையல்லா சொத்துக்களின் பௌதீக கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திற்கும் வருடாந்த சொத்துக் கணக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் சொத்துக்கள் தொடர்பிலான இக் கணக்கெடுப்பு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டு அதன் மீதான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான சொத்துக் கணக்கெடுப்பு அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டு நிதிப்பிரமாணத்துடன் இணங்கி ஒழுகப்படும். | நிதிப்பிரமாணத்துடன் இணங்கி ஒழுகுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | • முன்னைய பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் (பற்றாக்குறை மற்றும் மேலதிகங்கள்) இந்த அறிக்கைத் திகதி வரை திருத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| | | • முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் படி, அந்த மெய்மையாய்வுச் சபையானது நிதிப்பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள (T.&A. 66 மற்றும் பொது 47) படிவங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிற்கான சொத்துக் கணக்கெடுப்பு அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டு நிதிப்பிரமாணத்துடன் இணங்கி ஒழுகப்படும். | நிதிப்பிரமாணத்துடன் இணங்கி ஒழுகுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ/01/2020 ஆம் இலக்க நிதி, பொருளாதார மற்றும் கொள்கை வகுத்தல் | ஒவ்வொரு சேவைக்கு மான கட்டணங்கள், மதிப்பிடப்பட்ட காலம் போன்றவற்றை உள்ளடக்கிய பிரசைகள் சாசனம் பொதுமக்கள்/ சேவை நாடுனரின் பார்வைக்காக | பிரசைகள் சாசனம் தற்போது வரையப்பட்டு வருகின்றது. | அதிகாரசபையின் பொதுமக்களுக்கான வகைகூறலையும் நல்லாளுகையையும் மேம்படுத்துவதற்காக பிரசைகள் |

| | | | |
|---|---|---|---|
| அமைச்சின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | அலவலக வளவிலும் நிறுவனத்தின் இணைய தளத்திலும் காட்சிப்படுத்தப்படுவதனை தலைவரும் பணிப்பாளர் சபையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும், அதிகாரசபை இந்த அறிவுறுத்தலுடன் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் இணங்கி ஒழுகியிருக்கவில்லை. | | சாசனம் தயாரிக்கப்பட்டு பார்வைக்காக காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஊ) நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டலின் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சற்றறிக்கை | | | |
| (i) 4.2.5 ஆம் பந்தி | இருப்புக்கள் மீதான காலப்பகுப்பாய்வு மாதாந்த அடிப்படையில் பணிப்பாளர் சபையின் மீளாய்வுக்கும் கலந்தாலோசித்தலுக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபை அதன் கணக்கீட்டு முறைமையிலிருந்து இருப்பு காலப் பகுப்பாய்வு அறிக்கையை உருவாக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. ஆகையால், இருப்புக் காலப்பகுப்பாய்வின் அடிப்படையில் மெதுவாக நகர்கின்ற, அசைவுறாதுள்ள மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்களை கண்டறிவதில் அதிகாரசபை சிரமத்தை எதிர்கொண்டுள்ளது. | மென்பொருள் அபிவிருத்தியாளர் (Accsoft) அறிக்கையை உருவாக்கிய பின்னர் இருப்புக் காலப்பகுப் பாய்வு பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். | நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர், மெதுவாக நகர்கின்ற, அசைவுறாதுள்ள மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்கள் காலப் பகுப்பாய்வின் அடிப்படையில் கண்டறியப்படுதல் வேண்டும். |
| (ii) 6.5.3 ஆம் பந்தி | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>2020 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக 2022 பெப்ரவரி 08 ஆந் திகதி வரிசை அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. | வருடாந்த அறிக்கை குறித்த திகதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) 9.14 ஆம் பந்தி | மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வழங்குகின்ற நடைமுறை வழிகாட்டல் கையேடொன்று காணப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் மனித வளத்தை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கேற்ற அவ்வாறானதோர் அங்கீகரித்த வழிகாட்டல் கையேடொன்றை அதிகாரசபை வைத்திருக்கவில்லை. | மனித வளம் மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் கையேடு 2019 சனவரி 30 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. | அதிகாரசபையின் மனிதவளத்தை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கேற்ற அங்கீகரித்த வழிகாட்டல் கையேடொன்று காணப்படுதல் வேண்டும். |
| (ஏ) 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க மற்றும் 2020 சனவரி 03 ஆந் திகதிய 01/ 2017(1) ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கைகள் | ஆதிகாரசபைக்கு உரித்தான மற்றும் வாடகைக்கு விடப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களது நாளதுவரையான தகவல்கள் 2021 மார்ச் 15 இற்கு முன்னர் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபை 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அதற்கேற்ப செயற்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கவில்லை. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் படி தேவையான தகவல்களை அதிகாரசபை சமர்ப்பிக்க வேண்டும். |

**1.8 காசு முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பல்வேறு நோக்கங்களிற்காக அவ்வப்போது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 202 மில்லியன் முதல் ரூபா 410 மில்லியன் வரையான வீச்சிலமைந்த சராசரியான வங்கி மீதிகள் எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாது 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு மாதமும் அதிகாரபையின் தலைமை அலுவலகத்தால் பேணப்பட்டு வருகின்ற வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்று வைக்கப்பட்டிருந்ததுடன், இந்த நிலுவையானது தொடர்ச்சியாக அதிகரித்து 2022 பெப்ரவரி மாத இறுதியில் ரூபா 414.8 மில்லியனாக அதிகரித்திருந்ததுக் காணப்பட்டது. 2018 சனவரி முதல் 2021 திசெம்பர் வரை மேற்படி பணத்தை வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்ற முறையில் வைத்திருந்ததன் விளைவாக அரசாங்கத்திற்கு ஏறத்தாழ ரூபா 98.3 மில்லியன் நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. | அதிகாரசபையின் சராசரி மாதாந்த பணத் தேவை ரூபா 7.7 மில்லியன் தேய்மானத்தைக் கழித்த பின்னர் ரூபா 31 மில்லியன் ஆவதுடன் மாதாந்த தொழிற்படு மூலதனத் தேவை ரூபா 29.3 மில்லியன் ஆகும். 2011 சனவரி 27 ஆந் தேதியிட்ட PED 56 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி, அதிகாரசபை 6 மாத தொழிற்படு மூலதனத் தேவையை வைத்துக் கொள்ளலாம். எனவே, அதிகாரசபையின் 6 மாத தொழிற்படு மூலதனத் தேவை சுமார் ரூபா 175.8 மில்லியன் ஆகும். மேலும், அதிகாரசபையானது 2022 ஆம் ஆண்டிற்கான மீண்டு வரும் செலவினங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி | விளைவற்ற முறையில் வங்கி நடைமுறைக் கணக்கில் நிதியை வைத்திருக்காமல் மேலதிக தொகையை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கட்டுநிதியை பெறவில்லை. எனவே, ஏப்ரல் 2022 வரையிலான சம்பளத்தை வழங்குவதற்கு இந்த மீதியை அதிகாரசபை பயன்படுத்தியுள்ளது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 38,129,480 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 25,998,627 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 12,130,853 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. அதிகாரபையின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுச் செலவினமானது ரூபா 67,262,252 ஆல் குறைவடைந்தமையே நிதி விளைவுகளில் ஏற்பட்ட இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணியாக பங்களித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2006 சனவரி 01 முதல் 2011 மே 31 வரையான காலப்பகுதிக்குரிய ஊழியர் சேமலாப நிதி (EPF) தொகையான ரூபா 14,977,525 தெகையினை செலுத்தத் தவறியமையால் EPF இனால் ரூபா 7,488,762 தொகை மிகை அறிவீடாக விதிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த செலுத்தவேண்டிய ரூபா 22,466,287 தொகையானது 2022 ஏப்ரல் 30 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் சேமலாப நிதியம் விசாரணையொன்றை மேற்கொண்டிருப்பதுடன் இதனை செலுத்துமாறு அவர்கள் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கவில்லை. கடிதம் கிடைத்தவுடன் இத்தொகை தீர்க்கப்படும். | மேலதிக மிகை அறிவீட்டு மேலும் விதிப்பினை தவர்ப்பதற்காக உடனடியாக இந்த தொகை செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிர்மாணத் தொழிலில் ஈடுபட்டுள்ள தேர்ச்சிபெற்ற கைவினைஞர்களிற்கு கைவினைஞர் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா 35.7 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது. இதில் ரூபா 11.3 மில்லியன் தொகை இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான முற்பணமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (ICTA) 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. அதன்பின்னர், ICTA இனால் குறித்த நோக்கத்தை நிறைவேற்றாது அந்த முற்பணத்திலிருந்து ரூபா 9.6 மில்லியன் தொகை | ICTA க்கு வழங்கப்பட்ட முற்பணமான ரூபா 11.3 மில்லியனில் இச்செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1.67 மில்லியன் தொகைக்குரிய விவரங்கள் அடங்கிய அறிக்கையை ICTA அனுப்பியுள்ளது. இது குறித்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | எவ்வித தாமதமும் இன்றி கைவினைஞர்களிற்கு கைவினைஞர் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கும் மிகுதிப் பணத்தை ICTA இடமிருந்து அறவிடுவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேணடும். |

2021 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்கு மீளளிக்கப்பட்டிருந்ததுடன், இதற்காக கிடைத்திருந்த முழுத்தொகையும் அதற்குரிய நோக்கத்தை நிறைவேற்றாது 2022 ஏப்ரல் மாத இறுதி வரையிலும் வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.
மேலும், ICTA இல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 1.7 மில்லியன் முற்பணக் கொடுப்பனவை தீர்க்காமைக்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டு ஏழு (07) ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதிகாரசபையின் சீரான மற்றும் பயனுறுதியான செயற்பாட்டிற்காக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் செயற் பாடுகளை அதிகாரசபை செயற்படுத் தியிருக்கவில்லை.<br>- இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் தீர்மானிக்கப்பட்டவாறாக நிர்மாணத் தொழிலில் பயன்படுத்தப்படும் நிர்மாணப் பொருட்கள் மற்றும் நிர்மாண ஆக்கக் கூறுகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குனர்களின் விபரக்கொத்தொன்றை பேணுதல்.<br>- இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற திறமையான வேலையாட்களிற்கு கைவினை அடையாள அட்டைகளை பதிவுசெய்து, வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.<br>- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபித்தல்.<br>- வேறு நாடுகளில் நிர்மாண வேலைகளை பொறுப்பெடுக்கும் உள்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களை மேம்படுத்தி அவர்களிற்கு வசதியளித்தல்.<br>- நிர்மாணக் கைத்தொழிலிற்குத் தேவைப்படுகின்ற பொருட்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை பரிசீலனை செய்தலும் கண்காணித் | இது தொடர்பிலான அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு (மொ.தே.உ.) நிர்மாணக் கைத்தொழிலின் பங்களிப்பை மேம்படுத்தி அதிகரிப்பதற்காக இந்த செயற்பாடுகளை அதிகாரசபை துரிதப்படுத்த வேண்டும். |

தலும் அத்துடன் நிர்மாண வேலைகளில் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தலும்.
- நிர்மாணக் கைத்தொழில் மீதான தேசிய தரவுத் தளமொன்றை பேணுதல்.

### 3.4 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED / 12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகாரசபையின் இரண்டு ஊழியர்கள் முறையே 2002 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்/இணைக்கப்பட்டிருந்தனர். மேலும், 2021 திசெம்பர் 31 வரை அதிகாரசபையால் இந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளை கணிப்பிட்டு அதனை வரிசை அமைச்சிலிருந்து மீளப் பெறுவதற்கு 2022 ஏப்ரல் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி அதிகாரசபையின் எந்த ஊழியரும் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்படக்கூடாது. |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபையின் பணிப்பாளர் (நிதி) 2021 ஒக்தோபர் 08 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவர் அதிகாரசபையில் சேவையாற்றுகையில் கடுமையான முறைகேடு மற்றும் பொது நிதியை தவறாகப் பயன்படுத்தியதாகத் தெரிவித்து பணிநீக்கம் செய்யப்பட்டார். எவ்வாறாயினும், இந்த உத்தியோகத்தர் செய்த முறைகேடுகள் மற்றும் பொது நிதியை துஷ்பிரயோகம் செய்தமை குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரசபையின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் 2022 ஏப்ரல் 08 முதல் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். எனினும், இந்த அறிக்கை திகிதி வரை அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னாள் பணிப்பாளர் (நிதி) இன் பணி நீக்கத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதால், வரிசை அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின் படி அந்த ஆவணங்களை நிறுவனத்திற்கு வெளியே வெளியிட முடியாதுள்ளது. | உத்தியோகத்தரின் முறைகேடு மற்றும் பொது நிதி மோசடி குறித்து முறையான விசாரணை நடத்தி, தகுதியும் அனுபவமும் உள்ள தகுதியான நபர்களை இந்த வெற்றிடங்களுக்கு தாமதமின்றி நியமித்தல் வேண்டும். |
| (ஆ) அதிகாரசபையின் முன்னைநாள் பணிப்பாளர் நாயகம் தனது | இது தொடர்பில் அதிகாரசபையின் மனித வளங்கள் | அதிகாரசபையானது சட்டமா அதிபர் திணைக்களத்தின் |

| | | |
|---|---|---|
| சேவையை நிறுத்தியமைக்கு எதிராக 2021 சனவரி மாதத்தில், ஏறத்தாழ ரூபா 1,956,538 இழப்பீட்டுத் தொகையைக் கோரி தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அவரது சேவையை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட முறையற்ற மற்றும் சட்டவிரோத முகாமைத்துவ தீர்மானம் காரணமாக இத்தொகை அதிகாரசபைக்கு இனங்காணப்பட்ட காணப்பட்ட இழப்பு என்பது கணக்காய்வில் அவதானிக்கப் பட்டதுடன், இந்த பதவியும் 2022 மார்ச் 31 வரை வெற்றிடமாக காணப்பட்டது. | மற்றும் நிர்வாக கையேட்டின் பிரகாரம் தாங்கள் செயற்பட்டுள்ளதாக அதிகாரசபையின் முகாமைத்துவ சபை சுட்டிக் காட்டியுள்ளது. எனவே, இது தொடர்பாக மனிதவள மற்றும் நிர்வாகப் பிரிவில் இருந்து ஒரு அபிப்பிராயத்தை பெறலாம். | ஆலோசனைகளைப் பெற்று இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதுடன் முறையற்ற மற்றும் சட்டவிரோதமான நிர்வாகத் தீர்மானத்தை எடுத்தமைக்காக பொறுப்பான நபர்களிடமிருந்து அதிகாரசபைக்கு ஏற்பட்ட நட்டத்தை மீளப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 வாகன தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் ரூபா 6,412,500 பெறுமதியான நான்கு (04) வாகனங்கள் 05/2020 ஆம் இலக்க 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய நிதி அமைச்சால் வெளியிடப்பட்ட சொத்துகள் முகாமைத் துவ சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி பயன்படுத்தப் படாது, திருத்தப்படாது அல்லது அகற்றப்படாது 03 ஆண்டுகளுக்கும் மேலாக அதிகாரசபைக்கு சொந்தமான CETRAC கட்டிட வளாகத்தில் 2022 மார்ச் 31 வரையிலும் அழிவுறும் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. | வாகனம் இல. 56-5735 பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.<br>வாகனம் இல. 61-4630 OTC, கல்குளம இற்கு அனுப்ப திட்டமிட்ட போதிலும் அப்புறப்படுத்த திட்டமிடப்பட்டது.<br>வாகன இல. HA-1283, GB-9123 - இந்த வாகனங்கள் குறித்து அகற்றும் குழு அறிக்கை வெளியிடவில்லை. | இந்த விளைவற்ற வாகனங்களில் இருந்து அதிகபட்ச பலன்களைப் பெறுவதற்கு, சுற்றறிக் கையிலுள்ள அறிவுறுத் தல்களுடன் இணங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தந்துரோபாயத் திட்டம் மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டுதலின் 2.3 ஆம் பந்தியின் படி, தெளிவாக வரையறுக்கப்பட்ட செயலாற்றல் குறிகாட்டிகள் (KPIs) காணப்படுவதை உறுதிசெய்து, திட்டம் அமுல்படுத்தப்படுவதைத் தொடர்ச்சியாக மீளாய்வுசெய்து, நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படுவதற்குத் தேவையான இடங்களில் திருத்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக, 2021 - 2025 மற்றும் 2022 - 2026 காலகட்டத்திற்கான ஒரு தந்துரோபாயத் திட்டம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசுக்குச் | கருத்துரை வழங்கப்படவில்லை. | வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகளின் படி தந்துரோபாயத் திட்டமும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

சொந்தமான நிறுவனங்களுக்கான கூட்டி ணைந்த ஆளுகைக்கான வழிகாட்டுதலின் வழிகாட்டுதல்களின் பின்னிணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள வடிவமைப்பின்படி, மீளாய்வா ண்டிற்கும் எதிர்வரும் ஆண்டிற்குமான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக் கப்பட்டு 2022 ஏப்ரல் 30 வரை கணக்காய் விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபையின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் 2022 ஏப்ரல் 08 முதல் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். ஆகையால், அதிகாரசபை உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இன்றி தொழிற்படுவதுடன், தற்போது அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் ஒரு எழுது வினைஞர் மாத்திரமே காணப்படுகின்றார். | கருத்துரை வழங்கப்படவி ல்லை. | வெற்றிடத்தை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |